இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 11 NOVEMBER 2025
ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# ஜீவனாயிருக்கிறார்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில்
அன்பின் வாழ்த்துக்கள் பிரியமானவர்களே கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த
அடைக்கலத்திலே வைக்கப்படுவான். நீதி 29:25 என்ற வார்த்தையின்படி நம்முடைய
வாழ்வு உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படும். சூழ்நிலைகள் எதிராக இருந்தாலும்
கர்த்தர் மீது நாம் நம்பிக்கையை வைத்து ஜெபம் பண்ணினால்
நம்மை கைவிடாமல் உயர்ந்த அடைக்கலத்தில் கொண்டு செல்வார்.
தேவனுடைய பெரிதான கிருபையினால் அக்டோபர் 1 ,2 தேதிகளில் நடந்த
சுவிசேஷ ஜெப முகாமை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார் பல மாவட்டங்களில்
இருந்தும் மாநிலங்களில் இருந்தும் தேவன் ஜனங்களை கூட்டிச் சேர்த்தார் தேவ
மனிதர் தீர்க்கதரிசி வின்செண்ட் செல்வகுமார் அவர்களையும், எங்களையும்
ஆண்டவர் வல்லமையாய் பயன்படுத்தினார் இது அற்பமான ஆரம்பமாக இருந்தாலும்
தேவனாகிய கர்த்தர் இதில் பெரிய காரியங்களை செய்தார்
அவருக்கே மகிமை உண்டாவதாக
அதைத்தொடர்ந்து திருச்சியில் தீபாவளி தினத்தன்று குடும்ப ஆசீர்வாத கூட்டத்தை
தேவன் ஆசீர்வதித்தார் நமது சோஷியல் மீடியா ஊழியங்கள்
தினமும் திங்கள் முதல் வெள்ளி வரையிலும் ஆண்டவரின்
கிருபையால் நடக்கிறது நீங்களும் பார்த்து மற்றவர்களையும்
பார்க்கும்படி உற்சாகப்படுத்துங்கள் பத்திரிக்கை ஊழியத்தில்
இருந்தஇடையூறுகளை தேவன் நீங்க செய்து
தொடர்ந்து பத்திரிக்கை வெளிவர தேவன்
உதவி செய்கிறார் நன்றி
இயேசு வாழ்கிறார் ஊழியங்களுக்காக
நீங்கள் ஜெபித்தும் உங்கள் காணிக்கைகளால்
தாங்கியும் வருகிறீர்கள் நன்றி உங்களுக்காக
நாங்கள் ஜெபிக்கிறோம் தேவன் உங்களை
அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக



இயேசுவின் பணியில்
(சகோ. L.வின்செண்ட்ராஜ்)

சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

# ஜீவனாயிருக்கிறார்



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்

**அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. யோவான் 1:4**

நீங்களும் நானும் பின்பற்றுகிற தெய்வம், அவர் கல்லோ, மண்ணோ, மரமோ அல்ல அவர் ஜீவனுள்ள தேவன், அவர் உயிரோடு இருக்கிறார். இந்த பூமியில் மனிதனாக பிறந்து, நமக்காக, நமமுடைய பாவங்களுக்காக மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. யோபு என்ற மனுஷனைப் பற்றி உங்களுக்கு தெரியும். எவ்வளவோ பாடுகள், உபத்திரவங்கள். பிள்ளைகளை பறிகொடுத்த மனுஷன். சொத்துக்களை இழந்தவர் கொடியபுண் ஒன்று அவரைத் தாக்கிவிட்டது. பிழைப்பாரா என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட அந்த நிலையில் தான் அவர் என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி விட்டு **யோபு 10:12-ல் எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமல், தயவையும் எனக்குப் பாராட்டினீர் உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது** என்று கண்ணீரோட அவர் சொல்லுகிறார். மனைவியை பார்த்து, மூன்று நண்பர்களை பார்த்து சொல்லுகிறார் அவர் எனக்கு ஜீவனை தந்ததும் அல்லாமல் தயவு பாராட்டினார் என்று. இன்றைக்கு உங்களுக்கு ஊழியத்தை கொடுத்தார். பிள்ளைகளை கொடுத்தார். வேலையை கொடுத்தார். வருமானத்தை கொடுத்தார். இவ்வளவு செய்த தேவனுக்கு முதுகுகாட்டி. எனக்கு ஜெபம் பண்ண நேரமில்லை. ஜெபத்திற்கு நான் வரமாட்டேன் என்று சொல்லி உட்கார்ந்து இருக்கிறீர்கள். வாழ்விலும் தாழ்விலும் அவர் தான் உங்களுடன் இருக்கிறவர். ஆபத்து காலத்தில் நான் உன்னோடு இருப்பேன் என்று சொன்ன ஆண்டவருக்கு யோபு நன்றியாய் இருந்தார்.

## என் ஜீவன் உம் கரத்தில்

**சங் 31:15-ல் என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது. என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்** என்று சொல்லப் பட்டுள்ளது. என் காலங்கள், என் ஜீவன் மனிதனுடைய கையில் அல்ல, வியாதியின் கையில் அல்ல என்னை படைத்த, சிருஷ்டித்த, என்னை உண்டாக்கின தேவனுடைய கையில் இருக்கிறது என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து பூமியிலே வாழ்ந்த போது லூக்கா 13 அதிகாரத்தில் அவரை விரோதித் தவர்கள், பரிசேயர்கள் சொல்லுகிறார்கள் நீர் இந்த ஊரை விட்டுப் போய் விடும் ஏரோது உம்மை கொலை செய்ய தேடுகிறான் என்றார்கள். அவர்களிடம் இயேசு சொன்னார் நீங்கள் போய் அந்த நரிக்கு சொல்லுங்கள் அவன் என்னைத் தொட முடியாது, கொல்ல முடியாது ஏனென்றால் இன்றைக்கும் நாளைக்கும் நான் பிசாசுகளைத் துரத்தப் போகிறேன் என்றார்.

இன்றைக்கு எவ்வளவோ பிசாசு பிடித்தவர்கள் இருக்கிறார்கள். அனுதினமும் ஜனங்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உயிருக்கு போராடுகிறவர்களும் இருக்கிறார்கள். மருத்துவரால் கைவிடப்பட்டவர்கள் இருக்கிறார்கள். எட்டு லட்சம் ரூபாய் செலவழித்து ஆப்ரேஷன் பண்ணி அரை மணி நேரத்தில அந்த மனுஷன் இறந்து போனார். உங்களுக்கு லைஃப் இன்சூரன்ஸ் கவரேஜ் கொடுக்கும். ஒரு வேளை என்னமாவது ஆகிவிட்டால் உங்களை பாதுகாக்கும் என்றெல்லாம் உலக மனிதர்கள் சொல்லுவார்கள். நீங்களும் நானும் தேடுகின்ற தெய்வம் ஆண்டவராகிய இயேசு அவர் ஜீவனோடு இருக்கிறார். **மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் நான் உயிரோடு இருக்கிறேன்** என்று ஆண்டவர் சொல்லுகிறார். அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் உங்களுக்கு ஒளியாய் இருக்கும். உங்கள் வாழ்க்கையில் உள்ள இருளை அது விரட்டி விடும். குடும்பத்தில் காணப்படுகிற சண்டைகளை அகற்றி போடும். எந்தெந்த உறுப்புகள் செயல்பட முடியாமல், கண்ணு, காது, உடம்பெல்லாம் வீங்கி, நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு, இரத்த கொதிப்பு அதிகமாகி, ஐயா மருத்துவத்துக்கே செலவழிக்க முடியவில்லை என்று கண்ணீர் வடிக்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும் இயேசு ஜீவனாய் இருக்கிறார். மரித்தவர்களும் மௌனத்தில் இறங்குகிறவர்களும் ஜீவன் இல்லாதவர்கள். ஆனால் இயேசு உயிரோடு, ஜீவனோடு இருக்கிறார். இந்த நபரால் என் உயிர் போகுது. இந்த பிள்ளைகளால் என் உயிர் போகுது. குடும்பத்தில் ஒரே வேதனை. நான் ஒரு நடைபிணம். செத்து மடிகின்ற என்று சொல்கிற உலகத்துக்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட இந்த உலகத்தில் தான் கர்த்தர் நமக்கு ஜீவனாய் இருக்கிறார். நமக்கு வெளிச்சம், ஜீவன் அவர் தான்.

## வழியும் ஜீவனுமானவர்

**யோவான் 14:6-ல் அதற்கு இயேசு, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று** சொல்லுகிறார். நான் தான் உனக்கு வழி. உன் குடும்பத்துக்கு வழி. உன் பிள்ளைகளுடைய எதிர்காலத்துக்கு வழி. தொழிலுக்கு வழி என்கிறார்.

நான் ஒரு அனாதை, கணவனை இழந்தவள், மனைவியை இழந்தவன், உறவுகள் யாரும் இல்லை என்று நீங்கள் சொல்லலாம் ஆனால் அவர் சொல்லுகிறார் நானே உனக்கு வழியாய், சத்தியமாய், ஜீவனாய் இருப்பேன் என்று. இந்த ஜீவனுக்கு இன்னொரு பெயர் உயிர். நாம் எல்லாரும் ஒரு களிமண்ணாய் அசைவற்று கிடந்தோம். இந்த களிமண்ணை பிசைந்த ஆண்டவர் தன்னுடைய மூச்சை, தன்னுடைய சுவாசத்தை நமக்குள் அனுப்பி, நீ பிழைத்திரு என்றார். மிதிக்கப்படுவதற்கு ஏதுவாக கிடந்த உங்களைப் பார்த்து, தொப்புள் கொடி அறுந்து போகும் நிலையில் நீங்கள் கழுவப்படவும் இல்லை சுத்திகரிக்கப்படவும் இல்லை மிதிக்கப் படுவதற்கு ஏதுவாக கிடந்த உங்களை எசே 16:5-ல் சொல்லப்பட்டுள்ளபடி உன்கிட்ட வந்து நீ கழுவி, சுத்திகரிக்கப்பட்டு பிழைத்திரு, நீ வாழ்ந்திரு என்று சொல்லி உங்களுக்காக ஜீவனை கொடுத்திருக்கிறார்.

இன்றைக்கு நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள், உங்கள் கண் நன்றாக இருக்கிறதுக்கு நீங்கள் எடுத்த சாப்பாடு காரணம் அல்ல, நீங்கள் பல நாள் உயிரோடு இருக்கிறதுக்கு உங்கள் பக்தி ஒரு காரணம் இல்லை, என் ஜீவனையே உனக்கு நான் கொடுத்து, நான் ஜீவபலியாக வார்க்கப்பட்டேன் என்று சொல்லுகிறார். நீங்கள் என்னால் முடியவில்லை, பணநெருக்கடியை சமாளிக்க முடியவில்லை, வியாதி ஒரு பக்கம், செத்து மடிகிறேன், மனிதர்கள் என்னை ஏமாற்றி, நம்பிக்கை துரோகம் பண்ணி விட்டார்கள். என் பொருளை இழந்து, என் சொத்தை இழந்து, கண்ணீர் வடிக்கிறேன் என்கிறீர்களா! உங்களுக்காக ஒரு தெய்வம் தன் உயிரையே கொடுத்து வாழ்க்கைக்கு வழியையும் திறந்திருக்கிறார் அவர் இயேசு.


## ஜீவனைக் கொடுத்த அன்பு

**யோவான் 15:13-ல் ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத் திலுமில்லை.** ஒரு மனிதன் தன் நண்பனுக்காக கொடுக்கிற ஜீவனிலும் மேலான அன்பு ஒருவனிடத்தில் இல்லை.

உனக்காக என் உயிரையே நான் கொடுக்கிறேன் என்கிறார். நீங்கள் நல்லா இருக்கிறதுக்காக அவர் கை, கால்களில் ஆணி அடிக்கப்பட்டும், அவர் தலையிலே முள்முடி வைக்கப்பட்டும் நம் ஒவ்வொருவருக்காக மரணத்தை அவர் ருசி பார்த்தார். இதுதான் அவருடைய அன்பு. இயேசு தெய்வம் நமக்கு வர வேண்டிய ஆக்கினைகளை, தண்டனைகளை அவர் தன் மேல் ஏற்றுக்கொண்டார். ஒரு மனிதனின் செயல் எதற்காக, நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு இல்லை என்பதை நிரூபிக்க நமக்காக ஜீவனையே கொடுத்திருக்கிறார். ஜீவனையே கொடுத்த தேவன் குடியிருக்க ஒரு வீடு கொடுக்க மாட்டாரா?. திருமணமாகி பல வருஷம் குழந்தை இல்லை என்று எண்ணி இரத்தக்கண்ணீர் வடிக்கலாம். நிந்தைக்குள்ளாய் இருக்கலாம். நல்ல காரியங்களுக்கும், எந்த திருமண நிகழ்ச்சிக்கும் என்னால் போக முடியவில்லை. உறவுகள் மத்தியில் தலைநிமிர்ந்து நடக்க முடியவில்லை. அவர்கள் கேட்கிற கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை என்று நீங்கள் கண்ணீர் வடிக்கலாம். ஆண்டவர் சொல்லுகிறார் உனக்கு நான் ஜீவனாய் இருப்பேன். உன் கர்ப்பத்தில் ஒரு ஜீவனை நான் அனுப்ப போகிறேன் என்கிறார்.

மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கிறது என்று வேதத்தில் சொல்லப் பட்டுள்ளபடி வேலை இல்லாமல் இருப்பவர்கள், பலவீனப்பட்டு இருப்பவர்கள் அத்தனை பேருக்கும், கிட்னியில பிரச்சனை, வால்வு அடைப்பில பிரச்சனை, இரத்த கொதிப்புகளோடு போராடுகிற, இரத்த நாளங்களில் அடைப்புகள் எல்லாவற்றிற்கும் எந்த பைபாஸ் சர்ஜரியும் தேவையில்லை. எந்த ஆன்டிபயாடிக்கும் தேவையில்லை இயேசுவின் ஜீவன் உள்ள இரத்தம் இன்றைக்கு ஒரு அற்புதத்தை உங்களுக்குச் செய்யப்போகிறது. அவர் எனக்கும் உங்களுக்கும் ஜீவனாய் இருக்கிறார். அந்த இயேசுவை பார்த்து சொல்ல வேண்டும் இன்றைக்கு நான் உயிரோடு இருப்பது உங்களால் தான் என்று. **ரோம் 8:32-ல் தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர் நமக்காக மற்றவைகளை கொடுக்காதிருப்பாரா?** வேலை இல்லையா வேலை கொடுப்பார். வருமானம் இல்லையா வருமானத்துக்கு ஒரு வழி திறப்பார். வீடு இல்லையா வீட்டுக்கு ஒரு வழியை திறப்பார் எந்த இடத்தில் அவமானம் அடைந்தீர்களோ அதே இடத்தில் உங்களுக்கு அவர் ஜீவனாய் இருந்து உங்கள் தலையை உயர்த்துவார்.

## நித்திய ஜீவனை தருபவர்



**யோவான் 17:4-ல் பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.** இந்த ஜீவன் நீங்கள் நினைக்கிற மாதிரி இம்மைக்காக வாழ்வதற்கு, கை கால் நன்றாக இருப்பதற்கு, சாப்பிடுவதற்கு, வீடுகளை, தோட்டங்களை வாங்கி வசதி வாய்ப்பாக வாழ்வதற்கு மட்டும் அல்ல. தேவனை அறிகிற அறிவில் வளர்ந்து நித்திய ஜீவனைப் பெற வேண்டும். **ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். யோவான் 17:3.** கர்த்தரை அறிவது நித்திய ஜீவன். இந்த பூமியில் கண்ணை மூடினால் ஒரு நிமிஷத்தில் நீங்கள் நித்தியத்துக்குள்ளே போயிருப்பீர்கள். என் பிள்ளை என்று அவர் உங்களைச் சொல்லுவார். அங்கே நம்முடைய இந்த சரீரம் போகாது. நம் ஆத்துமா மட்டும் தான் போகும். இந்த உலகத்தில் சரீரத்திற்காக வாழ்ந்து தேவனை துக்கப்படுத்தாதீர்கள். உங்களை பரலோகம் கொண்டு போய் சேர்க்க, நித்திய ஜீவனை தரவே நான் இந்த பூமிக்கு இறங்கி வந்தேன் என்கிறார்.

கேட்டிற்கு போகிற வழி விசாலமான வழி. நித்திய ஜீவனுக்கு போகிற வழி ஒடுக்கமும் சுருக்கமான வழி. ஒருவன் தன்னுடைய ஆத்மாவை கெடுத்து நஷ்டப்படுத்தினால் நித்திய ஜீவனை இழந்து போவான்.

**மத்தேயு 16:26 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?** நீ நித்திய ஜீவனுக்கு போக உனக்காக நான் மரித்தேன். உனக்கு வேலையை கொடுத்தேன் எத்தனை விபத்து, ஆபத்தில், மரண கண்ணியில் உன்னை காப்பாற்றினேன் எனக்காக நீ என்ன செய்தாய்? செய்வாய்? ஆண்டவரே உங்களைப் பற்றி மற்றவர்களிடத்தில் சொல்லுவது என் கணவருக்கு அல்லது என் மனைவிக்கு இது பிடிக்காது என்று சாக்கு போக்கு சொல்வாயானால் தேவ மகிமைக்கு முன்னால் உங்களால் நிற்க முடியாது.

இன்றைக்கு உனக்காக தன் ஜீவனை கொடுத்த இயேசு உன் ஆத்துமாவிலே, உன் இருதயத்திலே, உங்கள் குடும்பத்தில் இருந்தால் தான் நீங்கள் தினமும் ஜெபிப்பீர்கள். ஒவ்வொரு மனுஷனுடைய உயிர் அவர்களுடைய இரத்தத்தில் தான் இருக்கிறது. நமக்கு நம்முடைய இரத்தத்தைக் காட்டிலும் இயேசுவின் இரத்தம் பரிசுத்தமான இரத்தம், ஜீவனுள்ள இரத்தம். அந்த இரத்தத்தினால் தான் நானும், நீங்களும் வாழ்கிறோம். இந்த இயேசுவை சொல்வதற்கும், ஜெபம் பண்ணுவதற்கும் நாங்கள் வெட்கப் பட்டது கிடையாது. மறுதலித்தது கிடையாது. நீங்களும் உங்களுக்கு நித்திய ஜீவனைத் தருபவரைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வெட்கப்படக் கூடாது.

## ஜீவன் இல்லாதவன்

**1 யோவான் 5:12-ல் குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.** பிதா யெகோவா தேவன், குமாரன் இயேசு கிறிஸ்து. இயேசுவை சொல்லும்போதே சாத்தான் அலற வேண்டும். இயேசு என்ற நாமம் தான் என்னை இன்றைக்கு ஜீவனோடு வைத்திருக்கிறது.. கோழி அடை காத்து முட்டைகளை பொறிக்கும் போது சில முட்டைகளை பொறிக்கும், சில முட்டைகளை பொறிக்காது. ஒன்பது முட்டையில் ஏழு பொரித்து விட்டது. மீதம் முட்டையை வைத்து விடும். அதை இன்றைக்கு அல்லது நாளைக்கு பொறித்து விடும் என்று எதிர்பார்த்தால் பொறிக்கவில்லை. அந்த கோழிக்கு தெரியுது இதற்குள்ளே ஜீவன் இல்லை. அவை கூமுட்டை என்று வைத்துவிட்டது. நீங்கள் இதுபோல ஜீவன் இல்லாதவர்களாய் இருக்க கூடாது. சவுல் ராஜா சொல்லுகிறார் தாவீதுக்கு முன்பாக நின்று உன் உயிரைப் பணயம் வைத்து, ஜீவனுள்ள தேவனை நிந்திக்கிறான் என்று சொன்னபோது நீ துணிந்து போய் கோலியாத்தை கொன்றாய். நான் பயந்தேன். வெட்கப்பட்டேன். உன் பின்னால் ஜனங்கள் எல்லாரும் போயிருவாங்கன்னு நினைத்தேன். உன்னை கொலை செய்ய இன்றைக்கு ஒரு அகதியைப் போல நாடோடியாய் காடுகளில் அலைகிறேன். மதியற்றவனாய் நடந்தேன் என்றான்.

**சங்கீதம் 27:1-ல் கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்? என்று சொல்லப்பட்டுள்ளது.** இஸ்ரவேலர்களை பாருங்கள் எல்லாருக்கும் தேவன் ஒருவர் தான் அப்படி இருந்தும். அவர்கள் கோலியாத்தைப் பார்த்து பயந்து ஓடி ஒழிஞ்சிட்டு இருந்தார்கள். ஆனால் தாவீதுக்கு மட்டும் கர்த்தர் எப்படி இருந்தார், கர்த்தர் என் வெளிச்சம், என் இரட்சிப்புமானவர் யாருக்கு பயப்படுவேன். கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர். யாருக்கு அஞ்சுவேன்? என்கிறார். நம்முடைய ஆண்டவர் நமக்கு பெலன் ஜீவன். ஜீவனுள்ள தேவனை நிந்திக்க கூடாது என்று தாவீது சொல்லுகிறார். இந்த ஜீவனுள்ள தேவன் என் ஜீவனுக்கு பெலனாக இருந்தால் தான் கரடியின் கைக்கும் சிங்கத்தின் கைக்கும் தப்புவித்தார். எனக்கு ஜீவனாய் இருக்கிறார் என்று சொல்லுகிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் ஜீவனாயிருந்து வழிநடத்துவாராக..




**இடம்:** வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல்.

தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449




LIVE
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
நம்பிக்கையின்
இரவு
நவம்பர்
30
ஞாயிற்றுக்கிழமை
இரவு 10:30 PM முதல்
12:30 AM வரை
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள்
மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது.
அக்டோபர் 29ஆம் தேதிக்குள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் 94428 00449


வேதாகமத்தை
பரிசாக
கொடுங்கள்
UPI ID
vincentrajministries-1@okaxis
உங்கள் மூலமாக
ஒரு ஆத்துமா
இயேசுவின் அன்பை
ருசிக்கட்டுமே!
DONATE NOW


ஒவ்வொரு மனிதனுக்கும்
ஒரு ஆத்துமா
ஜெபியுங்கள்,
தாங்குங்கள்
DONATE NOW
UPI ID
jesuslives.in/donate

சாட்சி பகுதி

# தீமை அணுகாதபடி காக்கிறவர்



**சகோதரர். உதயகுமார் - கோவை**

கடந்த வருடத்தில் நான் செய்யாத காரியத்திற்காக என் மீது பொய்குற்றம் சாற்றி என்னை ஜெயிலில் வைக்க வேண்டும் என்று எனக்கு எதிரானவர்கள் தீவிரமாக செயல்பட்டார்கள். இந்த நிலையில் கோர்ட்டுக்கு போகும் ஒவ்வொரு முறையும் நான் இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு ஜெபம் பண்ண கேட்டுக் கொண்டேன். சகோதரி அவர்கள் மிகவும் பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன் உங்கள் பக்கம் உள்ள நியாயத்தை வெளிப்படச் செய்வார், நிச்சயம் விடுதலையாவீர்கள், கர்த்தர் உங்களுக்கு நீதி செய்தார் என்று சொல்லி ஜெபித்தார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு பொய் குற்றச்சாட்டிலிருந்து நான் விடுதலையாக கிருபை செய்தார். என் சார்பில் செயல்பட்டு எனக்கு நீதி செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரர். தேவதாஸ் - கன்னியாகுமரி**


என் மருமகனுக்கு உடல் நலம் சரி இல்லாமல் மருத்துவமனையில் இருந்தார். மருத்துவர்கள் அவருக்கு முதுகெலும்பில் பிரச்சனை இருக்கிறது என்று சொன்னார். மருமகனும் வலி வேதனையில் மிகவும் கஷ்டப்பட்டார். அப்பொழுது நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருடைய சுகத்திற்காக, வேதனைகள் நீங்க ஜெபிக்க சொன்னேன். ஜெபக்குழுவினர் பாரத்தோடு ஜெபித்தார்கள் கர்த்தர் அற்புதமாக, தெய்வீக சுகம் கொடுத்தார். தேவாதி தேவனுக்கு நன்றி.

**சகோதரி. லெட்சுமி - திண்டுக்கல்**

எனக்கு சில நாட்களுக்கு முன்பாக குழந்தை பிறந்தது. நாங்கள் மருத்துவமனையில் இருக்கும் போது நானும், என் குழந்தையும் மிகவும் சுகவீனமாக இருந்தோம். என் குழந்தை பால் குடிக்க முடியாமல் கஷ்டப்பட்டு கொண்டிருந்தது. அப்பொழுது நான் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு எங்கள் சரீரசுகத்திற்காக, பெலவீனங்கள் மாற ஜெபிக்க சொன்னேன். சகோதரி அவர்கள் பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அற்புதமான சுகத்தை எங்கள் இருவருக்கும் கொடுத்தார். சுகம் தந்து எங்களை சாட்சியாக மாற்றின தேவனுக்கு கோடி நன்றி.

# கடந்த மாதத்தில் நடந்த கூட்டங்களின் சில பகுதிகள்

## செம்பட்டி, மதுரை கூட்டங்கள்





வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் அக்டோபர் 11-ஆம் தேதி நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். அநேக புதிய ஜனங்களை தேவன் அழைத்து வந்தார். அவர்கள் வாழ்வில் மனமாற்றத்தை கொடுத்து, அவர்கள் மன்றாட்டுக்கு பதில் தந்து அவர்களை சாட்சியாக வாழ வைத்திருக்கிறார்.

இக்கூட்டங்களில் நம் சகோதரி அவர்கள் பாடல்களைப்பாடி, ஆராதனையை நடத்தும்போது ஜனங்கள் தேவபிரசன்னத்தை அனுபவித் தார்கள். நம் சகோதரர் அவர்கள் தேவ செய்தி கொடுக்கும் போதும் தேவன் ஜனங்களை தொட்டு அவர்களை விடுதலையாக்குகிறார். தேவசெய்தியின் மூலம் அநேகர் தேவ எச்சரிப்பைப் பெற்று தங்கள் வாழ்க்கையை நல் வழிப்படுத்த மிகவும் உதவியாக இருந்தது. நீங்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத் தையும், தேவ வழிநடத்து தலையும் பெற உங்களை அன்போடு அழைக்கிறோம்.







மதுரை பட்டணத்தின் ஆசீர்வாதத்திற்காக, எழுப்புதலுக்காக, ஜனங்களின் இரட்சிப்பிற்காக ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமையில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் வைத்து நடைபெறும் ஊழியத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். ஒவ்வொரு மாதமும் புதிய ஆத்துமாக்களை தேவன் அழைத்து வருகிறார். ஜெபத்திற்கு வந்த ஒவ்வொருவரும் ஆவி ஆத்துமா சரீரத்தில் விடுதலையை பெற்று சாட்சிகளாக மாறுகிறார்கள் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. இக்கூட்டங்களில் நம் சகோதரி அவர்கள் பாடல்களை பாடி, ஆராதனையை நடத்தும்போது, நம் சகோதரர் அவர்கள் தேவ செய்தி கொடுக்கும் போதும் தேவன் ஜனங்களை தொட்டு அவர்களை விடுதலையாக்கி சாட்சிகளாக மாற்றுகிறார். நீங்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுங்கள்.



# சுவிசேஷ
# ஜெப முகாம்

அக்டோபர் 1,2 — செம்பட்டி

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2025 அக்டோபர் 1,2 தேதிகளில் நம்முடைய வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து நடைபெற்ற சுவிசேஷ ஜெப முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். நம் தேசத்தின் பல மாநிலங்களில் இருந்து அநேக சுவிசேஷகர்களையும், ஆத்தும பாரமுள்ள ஜெபவீரர்களையும் தேவன் திரளாய் அழைத்து வந்து தேசத்திற்காக, அழியும் மந்தர்களுக்காக பாரத்தோடு ஜெபிக்க வைத்தார். நம் சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்கள், சகோதரர். ஜோனத்தான் மற்றும் சகோதரி. ஏஞ்சலின் ஜோனத்தான் பாடல் ஆராதனை மற்றும் ஜெபங்களை நடத்தி ஜனங்களை தேவனிடத்தில் கிட்டி சேர வைத்தார்கள். சகோதரர். வின்செண்ட்ராஜ் அவர்கள் தேவ அழைப்பைக் குறித்தும், தேவனுக்காக செயல்படுவதைக் குறித்தும் தேவன் தந்த வார்த்தைகளை சுவிசேஷகர்களோடு பகிர்ந்து கொண்டார்கள்.














தீர்க்கதரிசி வின்செண்ட் செல்வகுமார் அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் வழியருகே இருந்த மரம் மற்றும் வேலி அடைக்கப்பட்ட தோட்டத்தில் இருக்கும் மரத்தைப் பற்றியும், தேவனுடைய திட்டம், நோக்கத்தைப் பற்றியும் அதை நாம் எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதைப் பற்றியும் மிகத்தெளிவாக பிரசங்கித்தார். அநேகருக்கு தேவன் புதுபுது அபிஷேகத்தை கொடுத்து, வல்லமை யினாலும்,, வரங்களினாலும் நிரப்பினார். அநேகர் ஆவி ஆத்துமா சரீரத்தில் உயிர் மீட்சி அடைந்தார்கள். அவர்கள் ஊழியம் செய்ய முடியாமல் இருந்த தடைகளை எல்லாம் தகர்த்து, அவர்களைப் பெலனடையச் செய்தார். வந்தவர்கள் ஆவியில் மாத்திரமல்ல சரீரத்திலும் பெலனடையும்படி அவர்களுக்கு தேநீர் மற்றும் உணவு, உறைவிடம் கொடுத்து போஷிக்க தேவன் கிருபை செய்தார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.

# குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

## திருச்சி



அக்டோபர் 20 ஆம் தேதி தீபாவளி தினத்தன்று திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். திரளான மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று செல்ல தேவன் கிருபை செய்தார். நம் சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை மூலம் ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் அழைத்துச் சென்று தேவனோடு இணைய செய்தார்கள். நம் சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்கள் குடும்பங்களில் ஆசீர்வாத குறைவுக்கு காரணம் என்ன என்பதையும் அதை எப்படி சரி செய்வது என்பதையும். குடும்ப அங்கத்தினர்களின் கடமை பொறுப்புகள் பற்றியும் மிகத் தெளிவாக தேவபிரசன்னத்தோடு விளக்கிச் சொன்னது வந்திருந்த ஜனங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. அநேகர் தாங்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் தேவவார்த்தையின் மூலம் பெலப்படவும். சமாதான மடையவும் தேவன் அநுக்கிரகம் செய்தார். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. அவருக்கே எல்லா துதியும் கனமும் உண்டாவதாக.











# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில்தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 49390201000 1022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY

GPAY TO , 944 300 9333,

## 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ – காலனி பரவை ,
மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Jesus Lives MINISTRIES

வியாழக்கிழமை

# 01 ஜனவரி

செம்பட்டியில்

புத்தாண்டு வாக்குத்தத்த

# ஆசீர்வாதக் கூட்டம் 2026

நேரம்: 3 PM -6 PM

**இடம்:**

வானத்தின் வாசல்
சுவிசேஷ மையம்
செம்பட்டி,
திண்டுக்கல்.

தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449